முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No. 628/2023

<u>வா.சா.2 / குமார் /09.09.2025</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

இவ்வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் கம்பெனி வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இவ்வழக்கு பற்றிய முழுவிவரங்கள் என் மனைவிக்கு தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1 கிரய பத்திரம் யாரால் தயாரிக்கப்பட்டது என்றால் பிரதிவாதி கனகராஜால் தயாரிக்கப்பட்டது. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் நான் எங்கு வைத்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் பிரதிவாதியின் வீட்டில் வைத்து கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் யாரெல்லாம் கையொப்பம் செய்தோம் என்று கேட்டால் நானும், மல்லிகஅர்ஜுனனும் கையொப்பம் செய்தோம். அதுபோக கிரயம் வாங்குபவரான என் மனைவி ஹேமலதாவும், விற்பனையாளரான கனகராஜும் கையொப்பம் செய்தார். அதுபோக வேறு யார் உடனிருந்தார்கள் என்று கேட்டால் கனகராஜின் மனைவி மற்றும் மகன் உடனிருந்தார்கள் வேறு யாரும் உடன் இல்லை. அவ்வாறு எந்த வாகனத்தில் அவரது வீட்டிற்கு சென்றோம் என்று கேட்டால் என் வீட்டிற்கு அருகில் தான் கனகராஜின் வீடு இருப்பதால் நாங்கள் நடந்தே சென்றோம். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் யார் முதலில் கையொப்பம் செய்தார்கள் என்றால் கனகராஜ் தான் முதலில் கையொப்பம் செய்தார். அடுத்ததாக ஹேமலதாவும் கையொப்பம் செய்தார். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தை முழுமையாக படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்ய பிரதிவாதி ஆட்சேபனை எதுவும் தெரிவித்தாரா என்றால் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டின் வாசல் எந்த திசையை பார்த்து உள்ளது என்றால் கிழக்கு பார்த்து உள்ளது. வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் வீட்டில் எந்த அறையில் வைத்து கையொப்பம் செய்தோம் என்று கேட்டால் வீட்டின் முன் போர்ட்டிக்கோவில் வைத்து கையொப்பம் செய்தோம். பிரதிவாதியின் வீட்டிற்குள் அப்போது சென்றோமா என்றால் சென்று பார்த்தோம். அவ்வாறு பார்த்த போது யாரெல்லாம் இருந்தார்கள் என்று கேட்டால் வீட்டில் வாடகைக்கும் இருந்தார்கள். அவ்வாறு வாடகைக்கு இருந்தவர்களிடம் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தபோகும் விவரத்தை சொன்னேனா என்றால்

சொன்னேன். அவர்களிடம் மாத வாடகை மற்றும் அட்வான்ஸ் எவ்வளவு என்று கேட்டேனா என்றால் இல்லை. எந்த தேதியில் எத்தனை மணிக்கு பிரதிவாதியின் வீட்டிற்கு சென்றோம் என்றால் 27.06.2022 திங்கட்கிழமை காலை சுமார் 11.00 மணியளவில் சென்றேன். அன்றைய தினம் பிரதிவாதி வேலைக்கு செல்லவில்லையா என்றால் இல்லை. நான் சொன்ன தேதியில் ரூ.2,00,000/- யாரிடம் கொடுத்தேன் என்று கேட்டால் நான் என் மனைவியிடம் கொடுத்தேன் என் மனைவி பிரதிவாதியிடம் கொடுத்தார். வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திய போது எவ்வளவு அட்வான்சாக கொடுத்தோம் என்றால் ரூ.2,00,000/- கொடுத்தோம். பிறகு பிரதிவாதி ஸ்ரீராம் பைனான்ஸில் பெற்ற ரூ.42,00,000/- கடன் தொகையை பிரதிவாதிக்காக செலுத்தினோம். வா.சா.ஆ.1 ஏற்படுத்தும் போது பிரதிவாதியிடம் இருந்து என்னென் ஆவணங்கள் பெற்று கொண்டோம் என்றால் பத்திர நகல் மட்டும் பெற்று கொண்டோம். பத்திரத்தின் அசல் ஸ்ரீராம் பைனான்ஸில் இருந்ததால் பத்திர நகலை மட்டும் பெற்று கொண்டோம். பத்திர நகலை கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சரிபார்த்தோமா என்றால் இல்லை. ஸ்ரீராம் பைனான்ஸில் ரூ.42,00,000/- செலுத்தியதற்கு செட்டில்மெண்ட் லெட்டர் பெற்றுக்கொண்டோமா என்றால் பெற்றுக்கொண்டோம். ஸ்ரீராம் பைனான்ஸில் இருந்து என்ன ஆவணங்கள் பெற்று கொண்டோம் என்றால் 9 ஆவணங்கள் பெற்றுள்ளோம் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம். வா.சா.ஆ.1 ஏற்படுத்தும் போது பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டையின் நகலை வாங்கினோமா என்றால் வாங்கினோம். இவ்வழக்கின் சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் அளவு எவ்வளவு என்றால் 1800 சதுரடி. தாவா சொத்தின் அன்றைய சந்தை மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆனால், நாங்கள் ரூ.51,00,000/-க்கு பேசி முடித்தோம். தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் எடுத்து பார்த்தோமா என்றால் எடுத்து பார்த்தோம் தேதி ஞாபகம் இல்லை. பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது அனுப்பினோம் என்று கேட்டால் தேதி ஞாபகம் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு யார் அனுப்பினார்கள் என்று கேட்டால் என் மனைவி தனது வழக்கறிஞர் மூலமாக அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு பிரதிவாதியை கிரயம் ஏற்படுத்த அழைத்தோமா என்றால் அழைத்தோம். பிரதிவாதியை எவ்வாறு எவ்வாறு அழைத்தோம் என்றால் தொலைபேசி மூலமாக அழைத்தோம். அவரது தொலைபேசி

எண் என்னிடம் உள்ளதா என்றால் எனது அலைபேசி பதிவில் உள்ளது. நான் அலைபேசியில் பிரதிவாதியை தொடர்பு கொண்ட போது அவர் பேசினாரா என்றால் அப்போது பேசினார். கிரயம் செய்து கொடுக்க காலம் தாழ்த்தி வந்தார். பிரதிவாதி என்ன வேலை செல்கிறார் என்று தெரியுமா என்றால் குடோனில் வேலைக்கு செல்வதாக சொன்னார். எந்த பகுதியில் வேலை செல்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதி எந்த குடோனிலும் வேலை செய்யவில்லை என்றும் அவர் அவிராம் என்ற கம்பெனியில் வேலைக்கு செல்கிறார் என்றும் சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான் பிரதிவாதிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றும் வழக்கிற்காக கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார் என்று உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு எனது வங்கி கணக்கு மூலமாக பணம் எதுவும் அனுப்பினேனா என்றால் இல்லை. என் மனைவியின் வங்கி கணக்கில் இருந்து ரூ.42,00,000/- RTGS மூலம் அவருக்காக கடனை தள்ளுபடி செய்ய அனுப்பப்பட்டது. வா.சா.ஆ.11 செட்டில்மெண்ட் லெட்டரில் பிரதிவாதி கனகராஜின் பெயர் உள்ளதா என்றால் இல்லை. ஸ்ரீராம் பைனான்சில் ரூ.42,00,000/-ஐ செலுத்தி விட்டு அசல் ஆவணங்கள் யார் முன்னிலையில் பெறப்பட்டது என்றால் பிரதிவாதி, பிரதிவாதியின் மகன் மற்றும் பிரதிவாதியின் மனைவியின் முன்னிலையில் பெறப்பட்டது. மணிவண்ணன் என்பவருக்கு ரூ.5,00,000/- எதற்காக கொடுத்தோம் என்று கேட்டால் பிரதிவாதி பெற்ற கடனுக்காக நீதிமன்றத்தில் தாவா சொத்து பற்றுகையில் இருந்ததால் தாங்களே மேற்படி பணத்தை செலுத்துமாறு பிரதிவாதி கூறினார்.

(குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

NANJAPPAN GUNASEKARAN

Digitally signed by NANJAPPAN GUNASEKARAN
Date: 2025.09.09 21:10:53 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.